# விசுவாசதுரோகம்

## விசுவாசதுரோகம் (யூதா 11)

By மெர்லின் இராஜேந்திரம்

"இவர்களுக்கு ஐயோ! இவர்கள் காயீனுடைய வழியில் நடந்து, பிலேயாம் கூலிக்காகச்செய்த வஞ்சகத்திலே விரைந்தோடி, கோரா எதிர்த்துப்பேசின பாவத்திற்குள்ளாகி, கெட்டுப்போனார்கள். இவர்கள் உங்கள் அன்பின் விருந்துகளில் கறைகளாயிருந்து, பயமின்றிக் கூட விருந்துண்டு, தங்களைத் தாங்களே மேய்த்துக்கொள்ளுகிறார்கள்; இவர்கள் காற்றுகளால் அடியுண்டோடுகிற தண்ணீரற்ற மேகங்களும், இலையுதிர்ந்து கனியற்று இரண்டுதரஞ் செத்து வேரற்றுப்போன மரங்களும், தங்கள் அவமானங்களை நுரைதள்ளுகிற அமளியான கடலலைகளும், மார்க்கந்தப்பி அலைகிற நட்சத்திரங்களுமாயிருக்கிறார்கள்; இவர்களுக்காக என்றென்றைக்கும் காரிருளே வைக்கப்பட்டிருக்கிறது" (யூதா 11-13).

விசுவாசதுரோகம் என்பது ஒரு கலப்படம். தேவனுக்குரிய காரியத்தையும் உலகத்துக்குரிய காரியத்தையும் கலப்பதால் ஏற்படும் விளைபொருளே விசுவாசதுரோகம். தேவனுக்குரிய, பரத்துக்குரிய, உன்னதத்துக்குரிய, ஆவிக்குரிய காரியத்துடன் உலகத்துக்குரிய, மாம்சத்துக்குரிய, பூமிக்குரிய, மண்ணுக்குரிய, இயற்கையான காரியத்தைக் கலப்பதால் ஏற்படும் விளைவே விசுவாசதுரோகம். இதற்கு நல்ல எடுத்துக்காட்டு யூதா 11ஆம் வசனம்.

யூதா 11இல் விசுவாசதுரோகத்தின் மூன்று வெளிப்பாடுகளைப் பார்க்கிறோம்: காயீனுடைய வழி, பிலேயாமின் வஞ்சகம், கோராவின் முரட்டாட்டம்.

### 1. காயீனுடைய வழி – பொய்யான மதம்

காயீன் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் பிறந்த முதல் மகன் (ஆதி. 4:1). புதிய ஏற்பாட்டில் அவனைப்பற்றி மூன்று இடங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது (எபி. 11:4; 1 யோவான் 3:12; யூதா 11).

காயீனுடைய வழி என்ன? அது தேவன் ஏற்றுக்கொள்ளாத வழி. ஆனால், உலகப்பிரகாரமான மனிதனுக்குச் சரியாகத் தோன்றக்கூடிய வழி. “மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள்” என்று வேதத்தில் வாசிக்கிறோம் (நீதி. 14:12; 16:25). காயீனுடைய வழி மதரீதியான வழிதான்; ஆனால், தேவனுடைய வழியல்ல.

தேவனை அணுகவும், ஆராதிக்கவும் ஆபேல் விசுவாசத்தினால் பலியிட்டான். “விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினான்” என்று எபிரெயர் 11:4 கூறுகிறது. அவன் மந்தையின் தலையீற்றுகளிலிருந்தும் அவைகளின் கொழுமையானவைகளிலிருந்தும்

கொண்டுவந்தான். அங்கு உயிர்ப்பலி இருந்தது; இரத்தம் சிந்தப்பட்டது. வேதாகமத்தின் முழு வெளிப்பாட்டின் வெளிச்சத்தில் பார்க்கும்போது, இப்படிப்பட்ட பலிகள் ஆண்டவராகிய இயேசுவின் பலியை நோக்கிச் சுட்டிக்காட்டுகின்றன.

காயீனும் ஜீவனுள்ள மெய்யான தேவனிடமே வந்தான். அவனும் காணிக்கை கொண்டுவந்தான். அவன் தன் நிலத்தின் கனிகளைக் கொண்டுவந்தான். ஆனால், தேவன் காயீனையும் அவனுடைய காணிக்கையையும் அங்கீகரிக்கவில்லை. ஆதியாகமம் 4 மட்டும் பார்த்து, "கனிகளைக் கொண்டுவந்ததால்தான் தேவன் அவனை நிராகரித்தார்" என்று சொல்ல முடியாது. புதிய ஏற்பாடு இன்னும் ஆழமாகக் காட்டுகிறது: ஆபேல் விசுவாசத்தினால் பலியிட்டான்; காயீனுடைய கிரியைகள் பொல்லாதவைகளாக இருந்தன, ஆபேலுடைய கிரியைகள் நீதியானவைகளாக இருந்தன (1 யோவான் 3:12).

எனவே, காயீனுடைய வழியின் மையம் இதுதான்: தேவன் வெளிப்படுத்திய வழிக்குப் பதிலாக மனிதன் தன் சொந்த வழியில் தேவனை அணுக முயற்சிப்பது. மனிதன் தன் நிபந்தனைகளின்படி தேவனை அணுகுகிறான். தேவன் விரும்புகிற முறையில் அவரை அணுகுவதற்குப்பதிலாக, தனக்குச் சரியாகத் தோன்றுகிற மதவழியை உருவாக்கிக்கொள்கிறான்.

இன்றும் நற்கிரியைகளினால், தானதருமங்களால், பூஜை புனஸ்காரங்களால், சடங்குகளால், பாரம்பரியங்களால், சட்டத்தால், புண்ணியங்களினால் தேவனை நெருங்கலாம் என்று மனிதன் நினைக்கிறான். ஜெபம், உபவாசம்போன்ற நல்ல காரியங்களைக்கூட கிறிஸ்துவுக்குப் பதிலாக தேவனை அணுகுவதற்கான அடிப்படையாக மாற்றிவிடலாம். பிரச்சினை ஜெபத்திலோ உபவாசத்திலோ இல்லை; கிறிஸ்துவுக்குப் பதிலாக அவைகளை வழியாக்குவதில்தான் இருக்கிறது.

இது சுய-நீதியின் போக்கு. இது, "தேவன் சொல்லுகிற வழியில் நான் வரமாட்டேன்; எனக்கு நலமாய்த் தோன்றுகிற வழியில் வருவேன்" என்று சொல்லுகிற மனிதனுடைய போக்கு.

காயீனுடைய பலியை தேவன் ஏற்றுக்கொள்ளவில்லை; அங்கீகரிக்கவில்லை. ஜீவனுள்ள மெய்யான தேவனைத்தான் அவன் அணுகினான். அப்படியானால் தேவன் ஏற்றுக்கொண்டிருக்கலாமே? இல்லை. ஆராதனை என்ற பெயரில் நடப்பதெல்லாம் தேவனால் அங்கீகரிக்கப்படுவதில்லை.

இப்படிப்பட்டவர்கள் மதவாதிகளாக இருக்கலாம்; ஏதோவொரு வகையில் தேவனை நம்பலாம். ஆனால், தங்களுக்கு நலமாய்த் தோன்றியபடி நம்புகிறார்கள். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவையும், அவருடைய இரத்தத்தையும், அவருடைய மீட்பையும், அவரையே ஒரே வழியாகவும் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள்.

ஆண்டவராகிய இயேசு, "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்று கூறுகிறார் (யோவான் 14:6). தேவன் கொடுத்த இந்த வழியை விட்டுவிட்டு வேறொரு வழியை

உருவாக்கிக்கொள்வது காயீனுடைய வழி.

காயீனுடைய வழி – பொய்யான மதம்.

## 2. பிலேயாமின் வஞ்சகம் – பொய்யான ஊழியம்

பிலேயாம் கொஞ்சம் நூதனமான மனிதன். எண்ணாகமம் 22ஆம் அதிகாரத்திலிருந்து அவனைப்பற்றிப் பார்க்கிறோம். பின்னர் அவனுடைய மரணத்தை எண்ணாகமம் 31:8 குறிப்பிடுகிறது. காயீனைப்போல பிலேயாமைப்பற்றியும் புதிய ஏற்பாட்டில் மூன்று இடங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது (2 பேதுரு 2:15-16; வெளி. 2:14; யூதா 11).

பிலேயாமைப்பற்றி வேதாகமம் பலவிதமான சொற்களைப் பயன்படுத்துகிறது. எண்ணாகமம் 31:16 "பிலேயாமின் ஆலோசனை" என்று கூறுகிறது. பேதுரு, "பிலேயாமின் வழி" என்று கூறுகிறார் (2 பேதுரு 2:15). திருவெளிப்பாடு 2:14 "பிலேயாமின் போதகம்" என்று கூறுகிறது. யூதா 11 "பிலேயாமின் வஞ்சகம்" என்று கூறுகிறது.

இவை அனைத்தையும் ஒன்றாகப் பார்த்தால் அந்த மனிதனின் உண்மையான சாயல் வெளிப்படுகிறது.

பிலேயாம் குறிசொல்லுதலோடும் நிமித்தம் பார்ப்பதோடும் தொடர்புடையவன். எண்ணாகமம் 24:1இல், அவன் வழக்கம்போல் நிமித்தம் பார்க்கச் செல்லவில்லை என்று சொல்லப்படுகிறது. யோசுவா 13:22 அவனை "குறிசொல்லுகிற பிலேயாம்" என்று குறிப்பிடுகிறது. இருந்தபோதும், இஸ்ரயேலின் தேவனைக் குறித்த அறிவும் அவனுக்கு இருந்தது; தேவன் அவனோடு பேசினார் (எண்ணா. 22:8-9). இன்னொரு புறம், பாலாக் அவனுக்கு வெகுமதி கொடுத்து இஸ்ரயேலைச் சபிக்கச் செய்ய முயன்றான்.

இவன் ஒரு கலப்படமான ஆளா இல்லையா?

அவன் தேவனுடைய வார்த்தைகளைக் கேட்டான். அதே மனிதன் வெகுமானத்தையும் விரும்பினான். அவன் தேவனுடைய வாயிலிருந்து அற்புதமான தீர்க்கதரிசன வார்த்தைகளையும் பேசினான். "யாக்கோபிலிருந்து ஒரு நட்சத்திரம் உதிக்கும்" என்ற அற்புதமான வார்த்தையும் அவன் வாயிலிருந்துதான் வந்தது (எண்ணா. 24:17). ஆனால், அவனுடைய இருதயத்தை வெகுமானத்தின் ஆசை பிடித்திருந்தது.

பேதுரு அதை மிகவும் தெளிவாகச் சொல்கிறார்: அவன் "அநீதத்தின் கூலியை விரும்பினான்" (2 பேதுரு 2:15).

இதுதான் பிலேயாமின் கலப்படம்.

தேவனுடைய வார்த்தை ஒருபுறம்.

பணம் இன்னொரு புறம்.

ஆவிக்குரிய வரம் ஒருபுறம்.

சுய-இலாபம் இன்னொரு புறம்.

தேவனைப்பற்றிப் பேசுகிறான்; ஆனால், தன் இலாபத்தையும் விடுவதில்லை.

அவனுடைய குறி என்ன? பாலாக் தரப்போகிற வெகுமானம்.

இதுதான் சுய-இலாபம்.

காயீன் தேவனுடைய வழியைத் தன் வழியால் மாற்றினான். பிலேயாம் தேவனுடைய வார்த்தையை அறிந்திருந்தும், இலாபத்துக்காக அதைச் சுற்றிவளைத்தான். கடைசியில் அவன் ஆலோசனையால் இஸ்ரயேல் மக்கள் விக்கிரகாராதனையிலும் பாலியல் பாவத்திலும் சிக்கும்படி வழி திறக்கப்பட்டது (எண்ணா. 31:16; வெளி. 2:14).

தேவனுடைய காரியத்தைத் தன் இலாபத்துக்குப் பயன்படுத்துவது பிலேயாமின் வழி.

ஊழியத்தை ஆதாயத்துக்கான வழியாக்குவது பிலேயாமின் வழி.

சத்தியத்தை அறிந்திருந்தும், பணம், பதவி, புகழ், செல்வாக்கு ஆகியவற்றுக்காக அதைச் சமரசம் செய்வது பிலேயாமின் வழி.

பிலேயாமின் வழி – பொய்யான ஊழியம்.

## 3. கோராவின் முரட்டாட்டம் – தேவன் நியமித்த ஒழுங்குக்கு எதிரான கலகம்

கோரா ஒரு லேவியன். அவன் கோகாத்தின் குடும்பத்தைச் சேர்ந்தவன். அவனோடு தாத்தானும் அபிராமும், இருநூற்று ஐம்பது பிரபுக்களும் சேர்ந்து மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக எழுந்தார்கள் (எண்ணா. 16).

அவர்களுடைய வாதம் மேலோட்டமாகக் கேட்டால் மிகவும் நியாயமானதாகத் தோன்றுகிறது: "சபையார் எல்லாரும் பரிசுத்தமானவர்கள்; கர்த்தர் அவர்கள் நடுவில் இருக்கிறார்; அப்படியிருக்க நீங்கள் கர்த்தருடைய சபைக்கு மேலாக உங்களை உயர்த்துகிறது என்ன?" என்று கேட்டார்கள் (எண்ணா. 16:3).

அவர்களுடைய வாக்கியத்தில் ஒரு பகுதி உண்மை. இஸ்ரயேல் மக்கள் தேவனுக்குப் பிரிக்கப்பட்டவர்கள். ஆனால், அந்த உண்மையை எடுத்துக்கொண்டு தேவன் ஏற்படுத்திய ஒழுங்கை அழிக்க முயன்றார்கள்.

கோரா லேவியனாக ஏற்கெனவே தேவனால் ஒரு சிறப்பான பணிக்காகப் பிரிக்கப்பட்டிருந்தான். அதுவே போதவில்லை. அவனுக்கு ஆசாரியத்துவமும் வேண்டும்.

மோசே இதைத்தான் நேரடியாகக் கேட்டார்:

“ஆசாரியப்பட்டத்தையும் தேடுகிறீர்களோ?”

(எண்ணா. 16:10)

எனவே, “நான் ஏன் தேவனை ஆராதிக்கக்கூடாது?” என்பதல்ல கோராவின் உண்மையான பிரச்சினை. அவன் தேவனை ஆராதிக்கத் தடைசெய்யப்பட்டவன் அல்ல. தேவன் தனக்குக் கொடுக்காத ஆசாரியப் பொறுப்பைத் தனக்கெடுத்துக்கொள்ள முயன்றான்.

இது சுய-விருப்பம்.

“தேவன் எனக்குக் கொடுத்த இடம் போதாது; நான் விரும்புகிற இடம் எனக்கு வேண்டும்” என்ற முரட்டாட்டம்.

தேவன் நியமித்த ஒழுங்குக்குள் இருக்க மறுத்து, தன் விருப்பத்தையே ஒழுங்காக மாற்ற முயன்றான்.

அதனால் யூதா இதை “கோராவின் முரட்டாட்டம்” என்று அழைக்கிறார்.

கோராவின் வழி – தேவன் நியமித்த அதிகாரத்துக்கும் ஒழுங்குக்கும் எதிரான பொய்யான ஆன்மீக உரிமைகோரல்.

இதை மூன்று வரிகளில் பார்க்கலாம்:

காயீன் – தேவன் கொடுத்த வழிக்குப் பதிலாக தன் வழியைத் தெரிந்தெடுத்தான்.

பிலேயாம் – தேவனுடைய சத்தியத்தைத் தன் இலாபத்துக்குப் பயன்படுத்தினான்.

கோரா – தேவன் நியமித்த ஒழுங்குக்கு எதிராக எழுந்தான்.

அல்லது இன்னும் சுருக்கமாக:

காயீனுடைய வழி – சுய-நீதி.

பிலேயாமின் வஞ்சகம் – சுய-இலாபம்.

கோராவின் முரட்டாட்டம் – சுய-விருப்பம்.

இதுதான் விசுவாசதுரோகத்தின் வளர்ச்சி. மனிதன் முதலில் தேவன் கொடுத்த வழியை மறுக்கிறான்; அடுத்து தேவனுடைய காரியத்தைத் தன் இலாபத்துக்குப் பயன்படுத்துகிறான்; கடைசியில் தேவன் ஏற்படுத்திய அதிகாரத்துக்கும் ஒழுங்குக்கும் எதிராகவே எழுகிறான்.

காயீன் தேவனுடைய வழியை ஏற்றுக்கொள்ளவில்லை. பிலேயாம் தேவனுடைய வார்த்தையை அறிந்திருந்தும் அதை இலாபத்துக்காக அற்பமாக எண்ணினான். கோரா தேவனுடைய வார்த்தையால் நிறுவப்பட்ட ஒழுங்குக்கு எதிர்த்துநின்றான்.

அவர்களுடைய முடிவும் தீவிரமானது. காயீன் தேவசமுகத்திலிருந்து புறப்பட்டுப்போனான் (ஆதி. 4:16). பிலேயாமின் மதிகேடு கடிந்துகொள்ளப்பட்டது (2

பேதுரு 2:16); கடைசியில் அவன் பட்டயத்தால் கொல்லப்பட்டான் (எண்ணா. 31:8). கோராவும் அவனுடைய கலகத்தோடு சேர்ந்தவர்களும் பயங்கரமான தேவ நியாயத்தீர்ப்பைச் சந்தித்தார்கள்; பூமி தன் வாயைத் திறந்து அவர்களை விழுங்கியது (எண்ணா. 16:31-33).

ஏசாயா 1:4இலும் இதே சீரழிவின் இன்னொரு வடிவத்தைக் காணலாம்:

“கர்த்தரை விட்டார்கள்... இஸ்ரயேலின் பரிசுத்தரை அசட்டைபண்ணினார்கள்; பின்வாங்கிப்போனார்கள்.”

விசுவாசதுரோகம் ஒரே நாளில் முழுமையாக உருவாவதில்லை. அது உள்ளத்தில் தொடங்கி, சொல்லிலும் செயலிலும் வெளிப்படலாம்.

கர்த்தரை விட்டுவிடுதல் – உள்ளத்தில் ஆரம்பிக்கும் விலகல்.

அவரை அசட்டைபண்ணுதல் – மனப்பான்மையிலும் சொல்லிலும் வெளிப்படும் எதிர்ப்பு.

பின்வாங்கிப்போகுதல் – வாழ்க்கையில் வெளிப்படும் விலகல்.

ஆகவே, விசுவாசதுரோகம் என்பது தேவனை வெளிப்படையாக மறுப்பது மட்டும் அல்ல. தேவனுடைய காரியத்தில் மனிதனுடையதைச் சேர்ப்பதும், தேவனுடைய வழிக்குப் பதிலாக மனிதனுடைய வழியை வைப்பதும், தேவனுடைய சத்தியத்தைச் சுய-இலாபத்துக்குப் பயன்படுத்துவதும், தேவன் ஏற்படுத்திய ஒழுங்கைச் சுய-விருப்பத்தால் மாற்றுவதும் அதன் வெளிப்பாடுகளாக இருக்கலாம்.

காயீன் – சுய-நீதி.

பிலேயாம் – சுய-இலாபம்.

கோரா – சுய-விருப்பம்.

மூன்றிலும் பொதுவானது ஒன்றுதான்:

தேவனுடையதை வைத்துக்கொண்டு, அதற்குள் மனிதனுடையதை கலப்பது.

அதுதான் விசுவாசதுரோகத்தின் ஆபத்தான கலப்படம்.